அ.வ.எண். **29/2022** பி.வா.சா.**1 –** செல்வம் **12.06.2024**

சாட்சி மனுவின்பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை

நான், யோகனந்த், பெருமாள் ஆகியோர் சேர்ந்து 1995 முதல் தற்போது வரை டெக்ஸ்டைல் தொழில் செய்கிறோம். 25.06.2018 அன்று நான் வாதியிடம் ரூ.3 இலட்சம் கடனாக பெற்றுக்கொண்டேன். அந்த கடனை திருப்பி செலுத்திவிட்டேன். காசோலை எண். 72 கே.அருண் என்ற பெயருக்கு வரைந்து கொடுத்தேன். அந்த காசோலையை வங்கியில் நேரடியாக கொடுத்து, பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது. அந்த காசோலை யார் பெயருக்கு வரையப்பட்டதோ, அந்த நபர் வங்கியில் நேரடியாக பணத்தை பெற்றுக்கொள்ளலாம். நான் சொல்வதுபோல், அருண் என்பவர் பெயருக்கு ரூ.3 இலட்சத்திற்கு காசோலை கொடுத்தேன் என்று சொல்வது முற்றிலும் தவறு என்றால் சரியல்ல. மேற்சொன்ன காசோலையில் குறிப்பிட்டுள்ள கே.அருண் என்பவர் வாதியின் மகன் அல்ல என்றால் சரியல்ல. நான் வாதியின் மகன் அருண் என்பவர் பெயருக்கு காசோலை கொடுக்கவில்லை என்றும், காசோலை எண். 72ன் மூலம் வாதியின் மகன் பணம் எதுவும் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது சுயகாசோலை மூலமாக ரூ.3 இலட்சம் எடுத்து, வாதியிடம் செலுத்திவிட்டேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் RTGS வங்கி பரிவர்த்தனை மூலமாக என்னுடைய பங்குதாரர் பெருமாள் என்பவருக்கு ரூ.4 இலட்சம் அனுப்பி, அந்த தொகையை வாதியின் மகன் அருண் ரொக்கமாக பெற்றுக்கொண்டார் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல.

2017ம் வருடம் நான் வாங்கிய ரூ.1 இலட்சத்திற்கு வட்டி எதுவும் செலுத்தவில்லை. அந்த தொகையை நான் இரண்டரை மாதங்களில் திருப்பி செலுததிவிட்டேன். அதனால் அதற்கு வட்டி செலுத்தவில்லை.

நான் வாதியிடம் ரூ.16 இலட்சம் கடன் பெற்றுக்கொண்டு, அந்த கடனை தீர்ப்பதற்காக காசோலை கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த காசோலை வசூலுக்கு போட்டு, போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் திரும்பியதால், வாதி எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றும், அந்த அறிவிப்புக்கு பிறகும் நான் தொகையை திரும்ப செலுத்தாததால், வாதி குற்றவழக்கு STC.853/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து, அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனை ஏமாற்றுவதற்காக, வழக்குச்சொத்தை பொறுத்து என் மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரியல்ல. நான் வாதியிடம் பெற்ற கடனை மோசடி செய்வதற்காக, வருமானவரி பிரச்சினை சம்மந்தமாக வாதியின் மகனுக்கு ரொக்கமாகவும், காசோலை மூலமாகவும் பணத்தை திருப்பி செலுத்தினேன் என்று பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவாக்கடன் தொகை ரூ.16 இலட்சம் எனது தேவைக்காக கடனாக வாங்கினேன் என்றும், எனவே அந்த கடனை வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.